# ஹிந்தி மொழி எதிர்ப்பு.

## சௌந்தரிய மஹால் கூட்டம்.

# தோழர் சோமசுந்தரபாரதியார் வீர உரை.

## "சிறை புகவும் தயார்"

## தமிழர்களுக்கு அழைப்பு.

சென்னை செப்டம்பர் 5

சென்னை ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியின் ஆதரவில் 5-9-37-ந் தேதி மாலை 5½ மணிக்கு சென்னை சௌந்தரிய மஹாலில் நடைபெற்ற ஹிந்திக் கண்டனக் கூட்டத்திற்கு தலைமை வகித்த சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல். அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு வருமாறு:—

தோழர்களே!

நான் ஒரு நாலணா காங்கரஸ் மெம்பர்; காங்கரஸில் இன்றும் மிகுந்த ஆர்வத்தோடுதானிருக்கிறேன். ஹிந்திப் பிரசார சபையிலும் ஜீவிய 'மெம்பராய்தானிருக்கிறேன். இதனால் காங்கரஸ்காரர் செய்யக்கூடிய காரியங்களிலுள்ள குற்றங் குறைகளை எடுத்துக்காட்ட உரிமையற்றவன் என்றோ அல்லது காங்கரஸ் விரோதிஎன்றோ ஒருவரும் கருதமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

### பார்ப்பனத் தந்திரம்.

காங்கரஸ்காரர்கள் ஹிந்தியை கட்டாய பாடமாக்க யோசித்திருப்பது, எந்த வகையிலும் நியாயமாகாது. ஹிந்தியை கட்டாய பாடமாக்கும் அவர்களுடைய உட்கருத்து என்னவென்று என்னால் அறிய முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகப் புலனாகிறது. அதாவது தமிழ் மொழியையும் கலையையும் அழித்து தமிழரை என்றென்றும் அடிமையாக்கி ஆரியக் கூட்டத்தினர் எஜமானர்களாக விளங்க வேண்டும் என்று செய்யும் பார்ப்பனீயத் தந்திரமேயொழிய வேறொன்றுமில்லை என்பதேயாகும். ஹிந்தியை கட்டாயபாடமாக்க திட்டம் போடப்பட்ட வுடனே தமிழ் மொழியின் வேர் துண்டிக்கப்பட்டுவிட்டது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். பாஷையைப்பற்றி அபிமானம் பிள்ளைகளுக்கு தோன்றுகிற பருவத்திலே ஹிந்தியை கற்கச் செய்யப் போகிறார்கள். ஆதலால் இனிமேல் மாணவர்களுக்கு தாய்மொழி அபிமானம்எங்ஙனமிருக்கும்? என்பதை யோசித்துப்பாருங்கள்.

இதுதவிர ஹிந்தி கட்டாயப் படுத்தப்படுவதால் மாணவர்கள் கற்கவேண்டிய பாடங்களின் தொகை பெருகுகிறது. நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கட்டாயபாடமாக்குவதைக் குறித்தோ அல்லது இஷ்டப் பாடமாக்குவதைக் குறித்தோ யாருக்கும் ஆட்சேபணையில்லை.

ஹிந்தியை கட்டாய பாடமாக்கவேண்டும் என்று கூறுகிறவர்கள் இந்தியர்களுக்குள் ஐக்கியத்தை வளர்ப்பதற்காகவே இவ்வாறு செய்யப் போகிறோம் என்று கூறுகிறார்கள். இந்தியர்களுக்குள் ஐக்கியத்தை உண்டுபண்ண தமிழையா பலியிடவேண்டும்? இந்தியாவிலே தமிழைத் தவிர ஏனைய பாஷைகள் எல்லாம் சமஸ்கிருதத்தைதழுவியிருக்கின்றன. தமிழ் ஒன்று தான் சமஸ்கிருதத்தை புறக்கணித்து தனித்து இயங்கி வருகின்றது. இதனால் அன்றோ அண்ணாமலைக் கழகத்திற்கு விஜயஞ் செய்து சொற்பொழிவாற்றிய ஒரு அறிஞர் எல்லா மொழியும் வடமொழிச் சொற்களைக்கடன் வாங்கியிருக்கதமிழ் மட்டும் ஏன் வாங்கவில்லை? என்று ஆத்திரத்துடன் கேட்டார். இவ்வாறு கேட்கிறவர்களுக்கு தமிழ் மொழி பிறமொழியின் வார்த்தைகளைக் கடன் வாங்க வேண்டிய தன்மையில் இல்லை என்று சொல்லுவதைத்தவிர வேறொன்றும் கூறுவதற்கில்லை.

### என்ன அவசரம்?

மொழி யழகுக்காக ஹிந்தியைக் கற்க வேண்டுமா என்று கேட்டால் அதற்காக ஒன்றுமில்லை; அதிக காலம் கற்பிக்க வேண்டும் என்ற ஆசை கூட எங்களுக்கு இல்லை; செகண்டரி ஸ்கூல்களில்தானே கற்கவேண்டுமென்று பிரியப்படுகிறோம்? என்று ஹிந்தி அபிமானிகள் கூறுகிறார்கள்.

இதனால்ஹிந்தியைக்கட்டாய பாடமாக்க என்ன அவசியம் நேரிட்டது என்று அறிய முடியவில்லை.

முதன் மந்திரி வாக்கை தேவவாக்காக மதித்து நடக்கும் ஒரு சென்னைப் பத்திரிகையில் தமிழை தாய் போலவும், ஹிந்தியை வேலைக்காரி போலவும் பிரதம மந்திரியை சிறு குழந்தை போலவும் சித்திரம் வரைந்து மார்க்கட்டில் சாமான்கள் வாங்குவதற்கு வேலைக்காரி துணை வேண்டுமென்று எஜமானியின் செல்லப்பிள்ளை தாயைக் கேட்பதுபோல் அபினயங் காட்டப்பட்டிருந்தது. அந்தப் படத்தை எடுத்துக் கொண்டால் ஹிந்தியைப் புகுத்தப்போகும் புரட்டு விளங்காமல் போகாது. வேலைக்காரியை சேர்ப்பது தாய் இஷ்டமா சேய்இஷ்டமா? என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். இதிலிருந்து தமிழரை அறைகூவியழைப்பது தோன்றவில்லையா? இவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொல்லப்போனால் நம்மை வகுப்புவாதி என்றழைத்து விடுவார்கள். ஆனால் இதைப்பற்றி அஞ்சவேண்டியதில்லை. யார் வகுப்பு வாதி? தமிழர்களா? அல்லது சொல்லுகிறதற்கெல்லாம் ஆமாம் சாமி போடுகிற ஒரு கூட்டத்தவர்களா? என்பதையோசித்துப் பாருங்கள் இந்தமாதிரி காரியங்களில்வகுப்புவாதிகள் என்று அழைக்கப்படுவதைக் குறித்து கவலைப்படாதீர்கள். எந்த கூட்டத்தார்—வகுப்பார் மற்றொரு வகுப்பாரின் குறைகளையும அபிலாஷைகளையும் கேட்டு ஒத்துழைக்க முன்வராமலிருக்கிறார்களோ, எவ்வளவு காலைக்கு அவ்வாறு இருக்கிறார்களோ அதுவரை வகுப்பு வாதம் இருந்தே தீரும். எல்லாப்பார்ப்பனர்களும் ஹிந்தியை கட்டாய பாடமாக்குவது அவசியந்தான் என்று கருதுகிறார்கள் என்பது எனக்கு ஆச்சரியத்தையே கொடுக்கிறது. இது உண்மையாயின் நாட்டிலே கலகமும், வகுப்புப் பிரிவினையும் என்றும் இருந்துதான் தீரும்

தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.

# ஹிந்தி மொழி எதிர்ப்பு.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்பதை நான் உறுதியாககூறுவேன்.

## தேர்தல் காலத்தில் சொன்னதென்ன?

காங்கரஸ் மந்திரிகள் வோட்டு பெறும்போது ஹிந்தியை கட்டாயப்படுத்தப் போகிறோம் என்று ஏதாவது ஒரு வார்த்தையாவது சொன்னதுண்டா? அல்லது இன்றுதமிழர்களுடைய ஆதரவைப்பெற்றுத்தான் ஹிந்தியை கட்டாயப் பாட மாக்கப்போகிறார்களாஎன்பதுஎனக்குவிளங்கவில்லை காங்கரஸ்காரர்கள் சொல்வதுபோல் தமிழர்ஆதரவு அவர்களுக்கிருப்பது உண்மையாயின் ஹிந்தியைக் கட்டாயப்படுத்தும் திட்டத்தை பொதுஜன அபிப்பிராயத்துக்குவிட இந்த காங்கரஸ் மந்திரிகளுக்கு ஆண்மையுண்டா? என்று கேட்கிறேன். தங்கள் கையில்தான் பதவியிருக்கிறதென்று எவ்வாறு வேண்டுமானாலும் மனம் போனபடி, அதுவும் தமிழர்களை தலையெடுக்காதபடி செய்வதென்றால் யார்தான் இதை சகித்துக் கொண்டிருக்க முடியுமென்று கேட்கிறேன்.

காங்கரஸ்காரர்கள் இன்று 6 மாகாணத்தில் மெஜாரிட்டியாயிருக்கிறார்கள்; வடநாட்டில் பெரும்பாலும் எல்லாராலும் ஹிந்தி பேசப்பட்டு வருகிறது என்று வெறும் பொக்கம் பேசுகிற காங்கரஸ்காரர்கள் எங்கேயாவது வடநாட்டில் ஒரு மாகாணத்திலாவது ஹிந்தியை கட்டாயப் பாடமாக்க முன்வந்திருக்கிறார்களா? திட்டம் போட்டிருக்கிறார்களா? என்று உங்களைக் கேட்கிறேன். தப்பித் தவறிக் கொண்டு வந்துவிட்டால் அவர்கள் கதி என்னாகும் என்பது தெரிந்தே பேசாது இருக்கிறார்கள். நம்மவர்களாகிய தமிழர்கள் சோணகிரிகள்—அதிலும் ஏமாந்த சோணகிரிகள், மனிதத்தன்மை, சுயமரியாதை, ஆண்மையற்றவர்கள் என்பதை அறிந்தே இவ்வாறு நமக்கு உலை வைக்கத் துணிந்துவிட்டார்கள். நம்மை அறைகூவியிருக்கிறார்கள் இதற்கு நீங்கள் என்னசெய்யப் போகிறீர்கள்? அவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப் போகிறார்களா! அல்லது அடிமைகளாக சூடு சொரணையற்றவர்களாக இருக்கப் போகின்றீர்களா?

## அஞ்சேல்!

ஏதாவது ஆபத்துகள் வரும் என்று பயப்படாதீர்கள். பதவியிலிருக்கும் கட்சியை எதிர்த்தால் பெரிய ஆபத்துகள் சம்பவிக்கும் என்று சிலர் அஞ்சுகிறார்கள் போலும்! ஏனெனில், இக்கூட்டத்திற்கு பேச ஒப்புக்கொண்டிருந்த ஒருவர் வாராததே இதற்கு அறிகுறியென்று கருதுகின்றேன். நாடு சுதந்தரமடைவதற்கு ஹிந்தியை கண்டிப்பது தடையாகும் என்றும் நாட்டின் சுதந்தரத்திற்காக தமிழை இழக்கவும் தயாராயிருக்கிறேன் என்றும் அவர் சொன்னதாக கேள்விப்பட்டேன். தாய் மொழியை பலியிட்டுப் பெறுகிறசுயராஜ்யம் அது எத்தகையதாயிருந்தாலும் நமக்குத் தேவையில்லை. தாய்மொழியைப் பலியிட்டு சுதந்தரம் பெறுவதை விட தாய் மொழியை காப்பாற்ற நான்உயிர் விட சித்தமாயிருக்கிறேன். உண்மையிலே சுதந்தரமென்று சொல்லப்பட வேண்டுமானால் மனிதனுக்கு எல்லா வகையிலும் பூர்ண சுதந்தரமிருப்பதேயாகும். என்றும் ஒரு கூட்டத்தாருக்கு அடிமையாக இருந்து சுதந்தரம்பெறுவதல்ல உண்மைச்சுதந்தரம். ஆதியிலும் நாம தமிழனாக இருந்தோம்; கடைசிவரை தமிழனாகவே இருக்கவேண்டும். தமிழனாக பிறந்தோம்; தமிழனாகவே இறக்கவேண்டும்.

## படிப்பினை.

இது சமயத்தில் உங்களுக்கு ஒன்றை எடுத்துக் காட்டப் பிரியப்படுகிறேன். வங்கப் பிரிவினையை எதிர்த்து வீர வங்காளிகள்எவ்வாறு போராடி பிரிவினையை ஒழித்தார்கள் என்பதை நாம் ஒரு படிப்பினையாக கொள்ள வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆகவே, வாலிபர்களே! ஆங்காங்கு வாலிபச் சங்கங்கள் தோற்றுவித்து இரவும் பகலுமாக விடாது கிளர்ச்சி செய்து கொண்டிருக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்ன எதிர்ப்பு வந்தாலும் பொருட்படுத்தாதீர்கள். எண்ணிய எண்ணம் கைகூடுகிற வரையில் தளராது கிளர்ச்சி செய்து கொண்டிருங்கள்.

தமிழ் மொழி எத்தனையோ ஆட்சி,எத்தனையோபிறபாஷைகளை கண்டுவிட்டது. இதுவரை ஒன்றாலும் அசைக்கப்படவில்லை. இந்த காங்கரஸ் ஆட்சியில் தானா அழியப்போகிறது? இல்லை. இல்லை. ஒரு காலும் இல்லை.

எந்த கவர்னர்களும் எந்த மந்திரிகளும் இருந்தாலும் சரியே. தமிழுக்கு மட்டும் இழுக்கு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். இப்போதைய அரசியல் சட்டத்திலே கவர்னர்களுக்கு ஒருவித சக்தியுமில்லை. ஆதலால் நீங்கள்தான் விழிப்புடனிருக்க வேண்டியவர்களாவீர்கள். ஜன நாயக தத்துவம் என்பது மைனாரிட்டியார்களின் உரிமைகளை சுதந்தரத்தைக் கொலை செய்வதா? அப்படிப்பட்ட ஜன நாயக தத்துவம் இருப்பதைவிட மறைவது நல்லதல்லவா என்று கேட்கிறேன். காங்கரஸ்காரர்கள் மெஜாரிட்டியாகஇருப்பதால் தமிழர்களை அடக்க—அடிமைப்படுத்த என்ன வேண்டுமானாலும் செய்யலாம என்று கருதுவார்களேயானால் அது அவர்களுக்கே வினையாக முடியும். சமயம் வரும்போது தமிழர்களுக்கும் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும் என்பதை (பார்ப்பனக் கூட்டத்துக்கு) எச்சரிக்கை செய்கிறேன். இந்த ஆறு மாகாணத்திலும் காங்கரஸ் பெற்ற வோட்டுகளில் சென்னை மாகாணத்தில் தமிழர்கள் ஓட்டுகளே அதிகமாகும். ஆதலால் தேச பக்தியில் மற்றவர்களைவிட தமிழர்கள் இளைத்தவர்களுமல்ல. தேசியத்தை புகுத்துவதற்காக ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குகிறோம் என்று சொல்லுவதில் ஒரு சிறிதாவது நியாயமிருக்கிறதா? என்று உங்களைக் கேட்கிறேன்.

## மாதர்களுக்கு வேண்டுகோள்.

இச்சமயத்தில் சகோதரிகளே! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்களும் உங்கள் சுயரூபத்தோடு இக்கிளர்ச்சியில் முழுப்பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். வாலிபர்களே! ஒரு சிறு அச்சமுமில்லாமல் போர் முரசு கொட்டி போருக்கெழுங்கள். உங்களைத்தான் தமிழன்னை எதிர்பார்க்கிறாள். வீறிட்டு எழுங்கள். சர்க்கார் அடக்கு முறை எத்தகையதாயிருந்தாயிருந்தாலும் சரியே. விடாப்பிடியாகப் போராட முன் வாருங்கள். வெற்றி நிச்சயம். சிறைக்குப் போய் விடுவோமோ என்று அஞ்சாதீர்கள். அப்படி சிறை செல்ல நேரிட்டாலும் நான் முதல் மனிதனாகச் செல்லத் தயாராயிருப்பேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

கடைசியாக ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதை எந்தெந்த வகைகளில் தடுக்க முடியுமோ அந்தந்த முறைகளைக் கைக்கொள்ள உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## தோழர்உமாமகேசுவரம்பிள்ளை

அடுத்தாற் போல் ராவ்சாகிப் டி. வி. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் பேசியதாவது:—

ஹிந்தியைக் கட்டாயப்பாடமாக்க விரும்புகிறவர்கள் உள்ளத்திலே வேறு அடிப்படையான இரகசியம் ஒன்று இருக்கிறது. அதுதான் சமஸ்கிருதத்தை புகுத்தவேண்டும் என்பது.கல்வியில் முன்னேறாத மக்களிடம் கல்வியின் வளர்ச்சியைத் தடை செய்வதற்காக சமஸ்கிருதத்தை உபயோகிக்கிறார்கள்.

சமஸ்கிருதத்திற்கும் ஹிந்திக்கும் அதிக வித்தியாசமில்லையென்பது சகலருக்கும் தெரிந்ததே. சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் ஹிந்தியை கற்பது மிகவும் சுளுவானதே, சமஸ்கிருதம் தெரியாதவர்கள் ஹிந்தி கற்பது கஷ்டமே. ஆகவே ஹிந்தியை கட்டாயப் பாடமாக்கிவிட்டால் சமஸ்கிருதம் தெரியாத தமிழ் மக்கள் கல்வியில் தேர்ச்சியடையாமல் தடுப்பதற்கு ஒரு மார்க்கமாகவே இந்த ஹிந்தி கட்டாய பாடமாக்கப்படுகிறது. இதன்கருத்துதமிழர்கள் கல்வியில்தேர்ச்சியடையாவிட்டால்தமிழர்களுக்கு கடுக்கா கொடுத்துவிட்டு பார்ப்பன சமூகம் கிடைக்கிற உத்தியோகங்களை ஏகபோகமாக அனுபவித்துக் கொள்ளலாம் என்பதேயாகும். இந்த எண்ணம் நிறைவேறி விட்டால் தமிழர்கள் கதி அதோகதிதான். அவர்கள் தலை எடுப்பதற்குகனவிலும் கருதமுடியாது. இவைகள் எல்லாம் முதன் மந்திரிக்கு நன்கு தெரியும். ஆனால் அவருடைய உள் எண்ணத்தை வெளியிடவேயில்லை.

## கட்டாய பாடமா?

தேசமெங்கும் தாய் மொழியிலே எல்லாக் கலைகளும் கற்பிக்கவேண்டும் என்ற உணர்ச்சி இருந்து வரும் இச்சமயத்தில் ஹிந்தியை கட்டாயப்பாடமாக்குவதின் அவசியம் என்ன? என்பது தெரியவில்லை. காங்காசுக்கு ஆண்மையிருந்தால்—தைரியமிருந்தால்—சக்தியிருந்தால் எங்கே இங்கிலீஷ் கட்டாயப்பாடமாக இருப்பதை ஒழிக்கட்டுமே பார்க்கலாம். ஆனால் அதற்கு வீரமில்லை. தைரியமில்லை. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்றாற்போல் தமிழர்கள்தான் அவர்கள் கண்களுக்கு ஏமாந்த அண்ணாத்தைகளாக—அடிமைகளாக தோன்றினார்கள் போலும்! ஆதலால்தான் தமிழர்கள் தலையில் கையை வைத்துவிட்டார்கள்.

இப்பொழுது உயர்தரப் படிப்புக்கு 100க்கு 10 பேர்கள்தான் தமிழர்கள் தேறிச் செல்லுகிறார்கள். இதையும் ஒழிக்கத்தான்ஹிந்தியைகட்டாயபாடமாக்கப்போகிறார்கள் என்பதையும் இதனால் வரும் பலா பலன் என்ன என்பதையும் நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். ஹிந்தியை கட்டாய பாடமாக்கி விட்டால் உயர்தர படிப்புக்கு 100-க்கு ஒருவனாவது தேறிச்செல்லுவானா என்பதை நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள்.

தலைவர்கள் ஒரு பத்திரிகை வெளியிட்ட சித்திரத்தை சித்தரித்துக் காட்டினார்கள்.

அவர் சித்தரித்தது போதாதென்றே சொல்லுகிறேன், அப்படத்தில் வேலைக்காரியை எஜமானி எழுந்திருந்து வரவேற்பது போல் எழுதப்பட்டிருக்கிறது.

எங்கேயாவது வேலைக்காரியைக் கண்டவுடன் எஜமானி எழுந்து நிற்பதுண்டா? வேலைக்காரி எஜமானியாய் விடுவாள் என்பதை இதுவிளக்கிக் காட்டுகிறதல்லவா! ஆகவே தோழர்களே! நமது முன் தோன்றிருக்கிற ஆபத்தை கவனித்துப் பாருங்கள்.

சில தினங்களுக்கு முன்தான் பார்லிமெண்டரி செக்ரட்டரி தோழர் வர்க்கி 4-வது பாரத்திலே சர்க்கார் பரீக்ஷை ஒன்று இருக்கும் என்று சொன்னார். இந்தப் பரீக்ஷையில் யார் உயர்ந்த மார்க்கு வாங்குகிறார்களோ அவர்கள்தான் மேல் படிப்புக்குப் போக முடியுமென்றும் கூறினார். இதனால் யாருக்கு கஷ்டம்? எவ் வகுப்பார் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்.

## ஆபத்தை உணருங்கள்

ஆதலால் ஹிந்தியை கட்டாயப்பாடமாக்குவதால் வரும் கேட்டை உணர்ந்து ஒவ்வொருவரும் ஆவன செய்ய முன்வர வேண்டும். நீங்கள் வோட்டளித்த காங்கரஸ் மெம்பர்கள் இது விஷயத்தில் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை கேளுங்கள். தாய் மொழி புறக்கணிக்கப்பட வேண்டுமென்று தோழர் காந்தியும் பண்டித ஜவஹர்லால் நேரும் கூட ஒருவார்த்தை சொல்லவில்லையே! அதற்கு பதிலாக தாய் மொழி காப்பாற்றப் பட வேண்டும்; வளர்க்கப் பட வேண்டுமென்றல்லவா கூறியிருக்கிறார்கள்.

இப்பொழுது காங்கரஸ் மந்திரிகள் செய்ய முனைந்திருக்கும் இக்காரியத்துக்கு தமிழர்களாதரவையும் பெறவில்லை. தலைவர்களாதரவையும் பெறவில்லை என்பது புலனாகவில்லையா? இந்த மாகாணத்திலுள்ள காங்கரஸ்காரர்கள் காந்திக்கு விரோதமான காரியங்களைக் கூட "மகாத்மா காந்திக்கு ஜே" என்ற கூச்சலைப் போட்டுக்கொண்டு பாமர மக்களைத் தங்கள் வசம் சேர்த்துக் கொண்டு தான் பல காரியங்களைச் சாதித்து வருகிறார்கள் என்பது உலகமறிந்த உண்மை. அது போலவே இதையும் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை இத்தகைய கூச்சல்களைக் கேட்டு தமிழர்களே ஏமாந்து விடாதீர்கள். நான் கனம் டாக்டர் சுப்பராயன் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவன். என்ன வந்தாலும் சரியே, தமிழுக்ாக உயிரை விடச் சித்தமாயிருக்கிறேன். முடிவும் செய்து விட்டேன். காங்கரஸ் மந்திரி பதவியிலிருப்பதால் இத்தகைய காரியம் செய்ய துணிவுகொண்டிருக்கிறார்கள் போலும் எப்பொழுதும் அவர்களுக்கே 'சுக்கிரதிசை' இருக்குமென்று கருதவேண்டாம் என்று எச்சரிக்கிறேன். தமிழர்களுக்கும் காலம் வரும்.அப்பொழுது தமிழ்க்கலை ஓங்கும். இப்பொழுது தோல்வியைக் கண்டு கவலைப்பட வேண்டியதில்லை. வாலிபர்கள் எல்லாம் ஒன்று கூடி தனியியக்கங்களைக் காணுங்கள். ஹிந்தியை எதிர்த்துப் போராடுங்கள்.

## தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம்.

அடுத்தாற் போல் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசியதாவது:—

தலைவர் சொன்னதைப் பின்பற்றநான் தயாராயிருக்கிறேன். காங்கரஸ்காரர்கள் பதவி வகித்த முதற்பலன் இது. தோழர் காந்தியார் சமீபத்தில் திருச்சிக்கு விஜயம் செய்த போது திருச்சி காங்கரஸ்காரர்கள் ஹிந்தியில் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள். இதை அப்பொழுதே அவர் கண்டித்தார். தாய் மொழியில் வாசித்தளிக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்தவனை ஏமாறச் செய்து விட்டீர்களே என்று வருத்தத்துடன் கூறியிருக்கிறார். தோழர் காந்தியார் ஹிந்தியைக் கட்டாயப்பாடமாக்கவேண்டு மென்பதில் ஆசைப்படவில்லை என்பதைத் தெரிவிப்பதற்காக இதைச் சொல்லுகிறேன்.

ஆதலால், வாலிபர்களே! இக் கிளர்ச்சியில் ஆர்வங்கொண்டு எழுந்து எந்த விதமான எதிர்ப்பையும் தடியடியையும் ஏற்கத் தயாராயிருங்கள்.

## தோழர் எஸ். மகமது சுல்த்தான் பாகாடி.

மதுரை தோழர் எஸ். மகமது சுல்த்தான் பாகாடி பின்னால் பேசுகையில் "தமிழர்களே பொறுமையை உதறித் தள்ளுங்கள். வீரத்தைக் காட்ட இதைவிட உங்களுக்கு வேறு சந்தர்ப்பம் கிடையாது. உடனே எழுங்கள்! போருக்குத் தயாராகுங்கள்" என்றும் "ஹிந்தி சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் பகிஷ்கரியுங்கள்" என்றும் பேசினார்.

## தோழர் சி. என். அண்ணாதுரை.

அடுத்தாற்போல் பேசிய தோழர் சி. என். அண்ணாதுரையவர்கள் பேசியதாவது:—

இதை ஒரு தனிப் பிரச்சினையாக கருதினோமேயானால் இதில் நாம் வெற்றி பெறுவது சந்தேகந்தான். இப்பிரச்சினையை அரசியல் நோக்கோடு பார்க்கவேண்டும். நான் காங்கரசுக்கு எதிர் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியைச்சேர்ந்தவன். காங்கரஸ் மந்திரிகள் ஹிந்தியைக்கட்டாயப்பாடமாக்கப்போகிறார்கள்என்பதில் எனக்குச் சிறிதும் ஆச்சரியமில்லை. ஏனெனில் இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது எங்களுக்கு முன்னதாகவே தெரியும்.

ஒரு சமயம் சபாரர்ஸ் ஸ்கூலில் ஹிந்தி மாணவர்களுக்கு யோக்கியதாம்சப் பத்திரமளிக்கும் போது தோழர் ராஜகோபாலாச்சாரியார், இப் பத்திரங்கள் பின்னால் நல்ல பயனளிக்குமென்று கூறினார். அந்த வாக்கை நிறைவேற்றுவதற்காக இப்போது பதவி கிடைத்த உடன் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்க துணிந்துவிட்டார். இப்பொழுது இம் மாகாணத்தில் சுமார் 8000 செக்கண்டரி ஸ்கூல்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஹிந்தி கட்டாயப் பாடமாக்குவதால் ஹிந்தி கற்ற 8000 பேர்களுக்கும் வேலை கொடுக்கப்படுமா அல்லவா? இந்த 8000 பேர்கள் யாராயிருப்பார்கள் என்பதை நான் சொல்ல வேண்டிய அளவில் இங்கு யாராவது இருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை. இந்த 8000 பேர்களும் காங்கரஸ் பிரசாரத்திற்கும் மறு தேர்தலில் காங்கரசுக்கு வோட்டு சேகரிப்பதற்கும் எவ்வளவு உதவியாயிருப்பார்கள் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இதையெல்லாம் நன்கு அறிந்துதான் கனம் ராஜகோபாலாச்சாரியார் இக்காரியத்தை இவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையே இவ்வளவு அவசரப்பட்டுச் செய்யத் துணிந்திருக்கிறார்.

அவர் எவ்வளவுதான் மழுப்பினாலும் தமிழர்களே! இதன் உண்மையை நீங்கள் சீர்தூக்கிப் பாருங்கள் ஹரிஜன சேவா சங்கமும் ஹிந்திப் பிரசாரமும் கதர் பிரசாரமும் காங்கரசின் ஏவலாளிகள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஆகவே எல்லாரும் ஒன்று சேருங்கள். ஒன்று சேர்ந்தால் காங்கரஸ் மந்திரியை பதவியினின்று வீழ்த்துவதற்கு வெகுகாலம் பிடிக்காது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றே போதும். கட்சியைப் பலப்படுத்த முன் வாருங்கள்.

தேசிய ஒற்றுமைக்குப்பொது பாஷை வேண்டுமென்று கூறுகிறவர்களை சுவிட்சர் லாந்தில் எது பொது மொழியாக விளங்குகிறது? அங்கு தேசபக்தியில்லையா? என்று கேட்கிறேன்.

கடைசியாக போலி சமாதானங்களையும் காரணங்களையும் கேட்டு ஏமாறாதீர்கள். போருக்குத் தயாராய் வாருங்கள்.

வந்தனோபசாரங்கூற கூட்டம் முடிந்தது.